செ.வெ.எண்: 669 நாள்: 12.11.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் குழந்தைகள் நலக் குழு ஆய்வுக் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் குழந்தைகள் நலக் குழு ஆய்வுக் கூட்டம் இன்று (12.11.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குழந்தைகள் நலக்குழுவின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

கோவிட்-19 மூலம் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் பற்றிய தகவல் மற்றும் மாவட்டத்தில் உள்ள காப்பகங்களில் குழந்தைகள் சேர்க்கை விபரம், தத்து குழந்தைகள் பற்றிய விபரம் மற்றும் குழந்தைகள் நலனுக்காக சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் குணசீலி, நன்னடத்தை அலுவலர் பிரேம்நாத், குழந்தைகள் நலக்குழுவின் தலைவர் ஸ்டெல்லா புஷ்பராணி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**